DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 241/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆனந்தன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : நாச்சிமுத்து | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 21.06.2024

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நீங்கள் உடுமலை கல்பானா வீதியில் பைனான்ஸ் நடத்தி வருகிறிர்கள் என்றால் இல்லை.எதிரி செந்தில்குமார் எப்படி தெரியும் என்றால் 2015 ல் இருந்து நண்பர் மூலம் பழக்கம். எதிரிக்கு கடன்கொடுத்தபோது எந்த விலாசத்தில் இருந்தார் என்றால் ஜல்லிப்பட்டி முழு விலாசம் தெரியாது. எதிரியின் வீட்டிற்கு சென்றதில்லை என்றால் சரிதான். 2015 ல் எதிரி என்ன தொழில் செய்து வந்தார் என்றால் அட்டை கம்பெனி எந்த முகவரி என்று தெரியாது. இந்த வழக்கு வரவு செலவு தவிர வேறு வரவு செலவு இருந்ததா என்றால் இருந்தது. அதற்கு ஆதரவு உள்ளதா என்றால் இல்லை. எதிரிக்கு எங்குவைத்து எத்தனை மணிக்கு பணம் கொடுத்திர்கள் என்றால் காலை 9.00-10.00 மணிக்கு எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். மேற்படி விவரத்தை புகாரிலோ, முதல் விசாரணையிலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2) நீங்கள் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் உங்கள் வீட்டில் யார் இருந்தார் என்றால் என் மனைவி இருந்தார். எதிரிக்கு பணம்

கொடுத்த விவரம் உங்கள் மனைவி தவிர யாருக்கும் தெரியாது என்றால் சரிதான். எதிரி 15.10.2018 ல் பணம் கேட்டதாக சொன்னபோது உங்களிடம் பணம் இல்லாததால் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதில் இருந்து ஒரு வார காலத்தில் எப்படி ஏற்பாடு செய்திர்கள் என்றால் விவசாய வருமானத்தில் இருந்து கொடுத்தேன். வங்கில் இருந்து எடுத்து பணம் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

3) எந்த ஆவணத்தின் அடிப்படையில் எதிரிக்கு கடன் கொடுத்திர்கள் என்றால் பிராம்சரி நோட்டின் அடிப்படையில் பணம் கொடுத்தேன். 22.10.2018 ல் எதிரிக்கு ரூ.5,00,000/–பணம் கொடுத்தற்கு நீங்கள் கூறும் பிராம்சரி நோட்டுதான் ஒரே ஆதாரம் என்றால் சரிதான். பிராம்சரி நோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராம்சரி நோட்டு யார் எழுதியது என்றால் எதிரி செந்தில் எழுதி கொண்டு வந்தார். பிராம்சரி நோட்டிற்கு சாட்சிகள் இல்லை என்றால் சரிதான். எந்த வருடத்தில் இருந்து வருமான வரி செலுத்துகிறேன் என்றால் 3 வருடம் செலுத்தினேன் பின்னிட்டு செலுத்தவில்லை எந்த வருடம் என்று ஞாபகம் இல்லை.

4) எதிரிக்கு ரூ.5,00,000/– பணம் கொடுத்த விவரத்தை வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளிர்களா என்றா் இல்லை. நீங்கள் சொன்னபடி எதிரிக்கு எந்த கடனும் கொடுக்காததால் தான் வருமான வரி கணக்கில் காட்டவில்லை என்றால் சரியல்ல. வருமான வரி கணக்கின் PAN கார்டு உள்ளதா என்றால் உள்ளது. உங்களுக்கு விவசாயம் தான் தொழில் என்றாலும் வேறு தொழில் இல்லை என்றாலும் ஆம் . எதிரி எத்தனை நாள் கெடுவில் கொடுப்பதாக கூறினார் என்றால் ஒரு வருடம். 5 மாத காலத்தில் காசோலையை எதிரியிடம் காசோலை பெற்றுக்கொண்டேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை.

5) எதிரி உங்களுக்கு காசோலை கொடுத்தற்கு சாட்சியம் இல்லை என்றால் சரிதான். காசோலையில் உள்ள வாசகங்கள் உங்கள் முன்னால் எதிரியால் எழுதப்பட்டது என்றால் சரிதான். காசோலை வாங்கிய தேதியில் எதிரியின் வங்கி கணக்கில் பணம் உள்ளதா என்பதை தெரிந்து கொள்ள எதிரியின் வங்கி கணக்கு புத்தகத்தை வாங்கி பார்த்திர்களா என்றால் இல்லை. எதிரிக்கு ரூ.5,00,000/– கொடுத்ததை திரும்ப பெற சிவில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே நீங்கள் சொன்னபடி எதிரிக்கு கடன் கொடுத்திருந்தால் சிவில் நடவடிக்கை எடுத்திர்பபிர்கள் என்றால் பணம் இல்லாததால் எடுக்கவில்லை. நீதிமன்ற கட்டணமே செலுத்தமுடியாத நிலையில் எதிரிக்கு ரூ.5,00,000/– கொடுத்ததாக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் விவசாய வருமானத்தை வைத்து கொடுத்தேன்.

6) என்னிடம் காட்டப்படும் புத.சா.ஆ.1 காசோலையில் உள்ள

கையொப்பம் ஒரு பேனா மையினாலும் வாசகங்கள் வேறு ஒரு மையினாலும் உள்ளது என்றால் எனக்கு ஒன்றாகத்தான் தெரிகிறது. காசோலையை அவரே நிரப்பி கொண்டு வந்தார். நீங்கள் சொன்னபடி 22.10.2018 ல் எதிரிக்கு ரூ.5,00,000/– பணம் கொடுக்கவும் இல்லை அதற்கு ஆதரவாக பிராம்சரி நோட்டு எதிரி கொடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை மற்றும் 118570 எண் கொண்ட காசோலையையும் எதிரியிடம் இருந்து தொலைந்துவிட்டதாக 24.02.2017 ம் தேதி Stop payment கொடுத்துள்ளார் என்றால் தொலைந்தது தெரிந்தே எனக்கும் கொடுத்துள்ளார்.

7) இந்த வழக்கு காசோலையை சட்டவிரேதாக கைப்பற்றி பணம் பறிக்கும் நோக்கத்தில் பூர்த்தில் செய்யுதுள்ளிர்கள் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள காசோலை எவ்வித மறுபயனும் பெறாத காசோலை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உங்கள் தரப்பில் வேறு சாட்சிகள் உள்ளாரா என்றால் இல்லை. நீங்கள் உண்மையிலேயே அதிகபட்ச தொகையான ரூ.5,00,000/– கொடுத்திருந்தால் உரிய சாட்சிகள் முன்னிலையில் கொடுதிருப்பிர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் பொய்யான விவரங்களை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.